<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>MCOP . No.177/2025</u>

<u>நாள் : 23.02.2026</u>

**ம.சா. 1 திருமதி.இந்திராணி**

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். நான் D.Ted முடித்து B.Edம் முடித்துள்ளேன். அத்துடன் அரசு பள்ளி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது கட்டேரி அரசு பள்ளியில் பணிபுரிந்து வருகிறேன். நிரூபண வாக்குமூலத்தில் எந்தவொரு இடத்திலும் அரசு பள்ளி ஆசிரியை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது கணவர் மத்திய அரசு ஊழியராக பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். 09.11.2021அன்று காலை 11.11 மணிக்கு நடந்த சாலை விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். என் கணவர் சுந்தரமூர்த்தி ஓட்டிச் சென்ற TN 23 W 6746 என்ற இருசக்கர வாகனம் அவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். அவர் தாமலேரிமுத்தூரில் உள்ள எங்கள் வீட்டிலிருந்து வாணியம்பாடி நோக்கி போனபோதுதான் விபத்து நடந்தது. எனது கணவர் வடதிசையை நோக்கி சென்றார் என்றால் சரிதான். விபத்தானது மேட்டுச்சக்கரகுப்பம் தாண்டி மலர் டைல்ஸ் கடை அருகே சாலையின் இடதுபக்கம் நடந்தது. எனது கணவருக்கு எதிர்திசையில் மினிலாரி வந்தது என்றால் சரிதான். லாரியானது தெற்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். அதன் பதிவு எண் TN 83 MA 0972 ஆகும். அது மினி லாரி ஆகும். விபத்து நடந்த சமயத்தில் பழுதுபார்ககும் பணிகள் நடந்துகொண்டிருந்தது என்றால் சரியல்ல. அந்த சாலை நான்குவழிச்சாலை என்றால் சரியல்ல, அது இருவழிச்சாலை ஆகும். மேற்படி சாலையை நான்குவழிச்சாலையாக அமைக்கவேண்டிதான் பழுதுபார்ககும் பணி நடந்தது என்றால் சரியல்ல. மேற்படி சாலை விபத்து நடந்த சமயத்தில் குண்டும், குழியுமாக இருந்தது என்றால் சரியல்ல. எனது இருசக்கர

வாகனத்தில் தலைக்கவசம் அணியாமல் எதிர்திசையில் வந்த மினிலாரியை கவனிக்காமல் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாணியம்பாடி நோக்கி லாரியை வேகமாக கடந்து செல்ல முயற்சித்தபோது விபத்து நடந்தது என்றால் சரியல்ல. எனது கணவர் சாலை விதிகளை கடைபிடிக்காமல் இருசக்கர வாகனத்தை இயக்கியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதாவது இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த நிலையில் நிலைதடுமாறி எனது கணவர்தான் லாரியின் பின்சக்கரத்தில் மாட்டி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. பொதுவாக எதிரெதிராக வரும்போது ஒரு வாகனத்தை மற்றொரு வாகனம் நேராக பார்க்கமுடியும் என்றால் சரிதான். இருவாகன ஓட்டிகளும் சாலை விதிகளை கடைபிடித்து நிதானமாக வாகனத்தை ஓட்டியிருந்தால் விபத்து நடக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, ஆனால் எனது கணவருக்கு முறையாக ஓட்டுநர் உரிமம் உள்ளது. (அவருக்கு டிராக்டர், கார் ஓட்டத்தெரியும். தலைக்கவசம் அணியாமல் வெளியில் செல்லமாட்டார், எனவே எனது கணவரின் கவனக்குறைவால் விபத்து நடக்க வாய்ப்பில்லை என்று சாட்சி கூறுகிறார்) நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரின்பேரில்தான் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் எந்த ஒரு இடத்திலும் என் கணவர் தலைக்கவசம் அணிந்து சென்றதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். (என்னுடைய அன்றைய மனநிலை காரணமாக குறிப்பிடப்படாமல் இருக்கலாம் என்று சாட்சி கூறுகிறார்) முதல் தகவல் அறிக்கையின் எந்தவொரு இடத்திலும் இருவழிச்சாலை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விபத்தானது இரு வாகன ஓட்டிகளின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

(எதிர்மனுதாரர் தரப்பில் எழுப்பப்பட்ட கேள்வியினால் சாட்சி உணர்ச்சிவசப்பட்டு அழுத நிலையில் 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.